www.Padasalai.Net www.CBSEtips.in

KK11T

**கன்னியாகுமரி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**
**காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2022**

-----

**வகுப்பு 11**

கால அளவு: 3.00 மணிநேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** i) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு: **i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14×1=14**

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1) பாயிரம் இல்லது ............. அன்றே.

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

2) அழகிய பெரியவனின் தமிழக அரசின் விருது பெற்ற நூல்

அ) குறடு ஆ) நெரிக்கட்டு இ) அரூப நஞ்சு ஈ) தகப்பன் கொடி

3) கலைகளின் உச்சம் .............

அ) கதை கூறுதல் ஆ) பாட்டு இ) நடனம் ஈ) கவிதை

4) நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது

அ) அணிந்துரை ஆ) தந்துரை இ) முகவுரை ஈ) பாயிரம்

5) மண்ணுக்கு வளம் சேர்ப்பன

அ) மண்புழு ஆ) ஊடுபயிர்

இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

6) 'பள்ளிசை' என்று அழைக்கப்படும் நூல்

அ) திருமலை முருகன் பள்ளு ஆ) காவடிச்சிந்து

இ) குறுந்தொகை ஈ) புறநானூறு

7) சொற்களின் இடையில் ஒரே மெய்யெழுத்து அடுத்தடுத்து வருவது ............. மெய்மயக்கம்.

அ) ஈரொற்று ஆ) வேற்றுநிலை இ) உடனிலை ஈ) தனிநிலை

8) **கூற்று** : 'கோடு' என்பது தமிழ்ச்சொல் ஆகும்.

**காரணம்** : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரன், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

அ) கூற்று சரி, விளக்கம் தவறு. ஆ) கூற்றும் விளக்கமும் சரி.

இ) கூற்று தவறு, விளக்கம் சரி. ஈ) கூற்றும் விளக்கமும் தவறு.

9) நமக்குப் பாடமாய் அமைந்துள்ள காவடிச்சிந்து பகுதியிலுள்ள நான்கு பாடல்களிலும் இடம்பெற்ற அணி

அ) மடக்கணி ஆ) உயர்வு நவிற்சி அணி

இ) இரட்டுற மொழிதலணி ஈ) தற்குறிப்பேற்ற அணி

10) 'இனிதென' - இச்சொல்லில் அமைந்துள்ள புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.

அ) உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்,
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

ஆ) தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்,
உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned with CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



11) புணர்ச்சியின்போது ஏற்படும் விகாரங்கள்
(i) தோன்றல் (ii) திரிதல் (iii) கெடுதல் (iv) எதுவுமில்லை
அ) முதல் இரண்டும் சரி ஆ) நான்கும் சரி
இ) முதல் மூன்றும் சரி ஈ) நான்கு மட்டும் சரி

12) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு - அணியைச் சுட்டுக.
அ) உவமை அணி ஆ) உருவக அணி
இ) சொல்பின்வருநிலை அணி ஈ) சொற்பொருள் பின்வருநிலையணி

13) "ஒன்றும் தவறாமல் சித்திரகுப்தன் எழுதிவரும் பதிவைப் போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார் ஆனந்தரங்கர்" என்று கூறியவர்
அ) உ.வே.சா. ஆ) வ.வே.சு. இ) மு.வ. ஈ) பாரதியார்

14) **சரியானதைத் தேர்ந்தெடுக்க:**
அ) வரை - மலை
ஆ) வதுவை - திருமணம்
இ) வாரணம் - யானை
ஈ) புடவி - கடல்
i) அ, ஆ, இ - சரி; ஈ - தவறு. ii) ஆ, இ, ஈ - சரி; அ - தவறு.
iii) அ, இ, ஈ - சரி; ஆ - தவறு. iv) அ, ஆ, ஈ - சரி; இ - தவறு.

## பகுதி - II

### பிரிவு - 1

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**
**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** **3×2=6**

15) வளருங் காவில் முகில்தொகை ஏறும் - பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும் - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?

16) காவடிச்சிந்து என்பது யாது?

17) மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

18) "ஊனமில் ஊக்கமும் ஒளிரக்காய்த்தநல்
தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்"
- இப்பாடலடிகளில் ஒளிரக்காய்த்தது எது? பழுத்தது எது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

19) தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.

20) சங்க காலத்தில் தமிழ்மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

21) நாட்குறிப்பு - குறிப்பு வரைக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** **7×2=14**

22) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**
தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

23) **பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:**
(அ) முக்கியத்துவம் (ஆ) கோரிக்கை

24) **மயங்கொலிச் சொற்களை ஒரு தொடரில் அமைத்து எழுதுக:**
குரை, குறை **(அல்லது)** வலி, வளி, வழி

25) **உறுப்பிலக்கணம் தருக:** நடந்தனன் **(அல்லது)** கொடுத்த

26) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**
தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned with CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



27) **இலக்கணக்குறிப்புத் தருக:**

அ) சுடச்சுடரும் ஆ) சுடச்சுட

28) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**

நஞ்சிருக்கும் - நஞ்சு இருக்கும்

29) ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?

30) **கலைச்சொல் தருக:**

அ) Backwater ஆ) Sailor

**பகுதி - III**

**பிரிவு - 1**

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** **2×4=8**

31) சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என்று எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32) ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.

33) புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறைவழி நின்று கூறுக.

34) "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - **இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** **2×4=8**

35) 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்" என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

36) சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.

37) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

38) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** **3×4=12**

39) 'இளையதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து' - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

**(அல்லது)**

வேற்றுமை அணியைச் சான்றுடன் விவரி.

40) பொதுவியல் திணையைச் சான்று காட்டி விளக்குக.

**(அல்லது)**

பொருண்மொழிக் காஞ்சித்துறையைச் சான்றுடன் விவரி.

41) **கீழ்க்காணும் பாடலைப் படித்து, அதன் மையக்கருத்தை எழுதி, ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக:**

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
 பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
 மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
 காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
 பேதமை யற்றிடும் காணீர்.

**- பாரதியார்**

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned with CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



42) உங்கள் பகுதி நூலகத்தில் வாசகர்களுக்கு நூலக உறுப்பினர் அட்டை வழங்க வருகை தரும் அறிஞர் ஒருவரைக் குறித்து அறிமுக உரை எழுதுக.

43) தமிழாக்கம் தருக:

அ) Knowledge rules the world.

ஆ) Work while you work and play while you play.

இ) Culture does not make people. People make culture.

ஈ) Education is the most powerful weapon, which you can use to change the world.

43) காதுகேளாதோருக்கான மாற்று வினா:

செந்தமிழ்ச் செம்மல் டாக்டர் ஜி.யு.போப், 1839 ஆம் ஆண்டில், தென்னிந்தியாவுக்கு வந்தார். சென்னையை அடைந்த போப் 'சாந்தோம்' என்னும் இடத்தில் முதன் முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார். ஆங்கிலேயரான அவரின் தமிழுரை கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது. இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.

வினாக்கள்:

அ) செந்தமிழ்ச் செம்மல் என்று சிறப்பிக்கப்படுபவர் யார்?

ஆ) போப் தென்னிந்தியாவுக்கு எப்போது வந்தார்?

இ) போப் தமிழில் உரை நிகழ்த்திய இடம் யாது?

ஈ) போப் மொழிபெயர்த்த தமிழ் நூல்கள் யாவை?

## பகுதி - IV

பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக: **3×6=18**

44) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரி. **(அல்லது)**

'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' - இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

45) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

**(அல்லது)**

தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

46) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

**(அல்லது)**

வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

## பகுதி - V

அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக: **4+2=6**

47) அ) "உண்டால் அம்ம" - எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

ஆ) 'உலகு' - என முடியும் குறட்பாவை எழுதுக.

----------

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593 Scanned with CamScanner